OS.No. 215/2023

Date : 25.02.2026

Witness Name & Rank – மகேந்திரன் – PW2

**சாட்சி அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டது**

1. வழக்கு வாதி எவ்வளவு தொகை கேட்டு வழகக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் ரூ. 2 லட்சம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வாதம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி கடன் தொகை எனது கடையான மாணிக்காபுரம் சாலையில் உள்ள ஜெயம் Stationeries கடையில் வைத்து கொடுக்கப்பட்டது என்றால் இல்லை, பதிவு துறை அலுவலகத்தில் வைத்து கொடுக்கப்பட்டது. 2 ம் பிரதிவாதி அன்பழகன் வட்டி தொகையை எனது கைபேசியில் உள்ள G Pay மூலம் செலுத்தி வந்தார் என்றால் இல்லை. வாதி என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் நிதி நிறுவனம் மற்றும் வாகன வியாபாரம் செய்து வருகிறார். பிரதிவாதிகள் கடனுக்கு ஆதரவாக வீட்டு பத்திரம் கொடுத்திருந்தார்கள் என்றால் இல்லை. மாதம் வட்டி எவ்வளவு என்றால் தொகையாக ரூ.3 ஆயிரம் ஆகும். பிரதிவாதிகள் இதுவரை எந்த வட்டியும் செலுத்தவில்லை என நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.
2. மேற்படி பிரதிவாதிகள் வீட்டு பத்திரத்தை அடமானம் வைத்து தான் கடன் ரூ. 2 லட்சம் வாங்கி அதை முறையாக செலுத்தி வீட்டு பத்திரத்தை மீட்டு விட்டார்கள் அதை மறைத்து நான் பொய் சாடசியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி எனக்கு என்ன உறவு என்றால் வாகன வியாபார மூலம் தெரியும். கடனுறுதிச் சீட்டு எங்கு வைத்துயாரால் தயாரிக்கப்பட்டது என்றால் பதிவு துறை அலுவலகத்தில் வைத்து ராஜேஷ் வழக்கறிஞர் மூலம் தயாரிக்கப்பட்டது. ஏற்கனவே திருப்பி செலுத்தப்பட்ட கடனுக்கு அதிக வட்டி கோரி வீண் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

---

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டடச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/–)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.